# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/32 - 2014 නොවැම්බර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.11.20

*1889/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் மற்றும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சராகவும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 252 ஆம் அத்தியாயமாகிய மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவின் கீழ் எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள மாநகர சபை முதல்வர், பிரதி மாநகர முதல்வர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான படிக்குரிய கட்டளையை இங்கு நிறைவேற்றப்படுவதாகுக. இக்கட்டளை 2014.11.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதுடன், அத்தினத்திற்கு முன்புள்ள திகதி தொடக்கம் செயற்படுத்தும் வகையில் விடயத்திற்குரிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1578/4 ஆம் இலக்க மற்றும் 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 2008.12.01 ஆந் திகதியின் கட்டளை மாற்றப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும்
திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு,
பொறியியல் சேவைகள் மற்றும் செய்தி தொடர்பான அமைச்சர்.

சிராவஸ்தி மந்திரய,
ஸ்ரீமத் மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 19.

**கட்டளை**

1. இக்கட்டளை மேல் மாகாணத்தின் மாநகர சபை நகர முதல்வர், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கு படிசெலுத்தும் கட்டளையாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணத்தின் மாநகர சபைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாநகர சபை, நகர முதல்வர்களுக்கும், பிரதி முதல்வர்களுக்கும் மற்றும் சபை உறுப்பினர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிஒன்று 2014, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் செலுத்தப்படவேண்டும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| நகர முதல்வர் | - | 30,000.00 |
| பிரதி நகர முதல்வர் | - | 25,000.00 |
| சபை உறுப்பினர் | - | 20,000.00 |

3. (1) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மாநகர சபை முதல்வருக்கு, பிரதி முதல்வருக்கு உறுப்பினர்களுக்கு மேலுள்ள படிக்காக உரிமை கிடைக்கப்பெறமாட்டாது.

(i) சபையின் அனுமதியைப் பெறாது படியை கொடுப்பனவு செய்வதற்கு உரிய மாதத்தின் சபைக் கூட்டத்தில் மற்றும் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காமை ;

(ii) சபையின் பணிகளுக்கும் வெளிவாரியாக தனிப்பட்ட பணிகளுக்காக வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளல் ;

(iii) ஏதாவது குற்றமொன்றுக்காக குற்றப்பத்திரிகை சுமத்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குச் செல்லுதல் அல்லது சிறையிலிருத்தல்.

(2) இக்கட்டளையின் 1 ஆம் பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், மாநகர சபை முதல்வர், பிரதி நகர முதல்வர், அல்லது சபை உறுப்பினர் ஒருவரின் கடமை கருமங்களுக்காக ஒழுங்கு முறையில் அமைந்த அனுமதியுடன் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் சபைக் கூட்டத்திற்கு அல்லது நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காத காரணத்தின் அடிப்படையில் அவரது படிக்கு உரிமையுடையவராவர்.

12- 178/1

---

**மேல் மாகாண மாகாண சபை**

**அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சராகவும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 255 ஆம் அத்தியாயமாகிய நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 193 ஆம் பிரிவின் கீழ் எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள நகர சபைத் தலைவர், நகர சபை உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான படிக்குரிய விதி இங்கு நிறைவேற்றப்படுவதாகுக. இவ்விதி 2014.11.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதுடன், அத்தினத்திற்கு முன்புள்ள திகதி தொடக்கம் செயற்படுத்தும் வகையில் விடயத்திற்குரிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1399/5 ஆம் இலக்க மற்றும் 2005 ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 2005.06.27 ஆந் திகதியின் கட்டளை மாற்றப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும்
திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு,
பொறியியல் சேவைகள் மற்றும் செய்தி தொடர்பான அமைச்சர்.

சிராவஸ்தி மந்திரய,
ஸ்ரீமத் மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 19.

**கட்டளை**

1. இக்கட்டளை மேல் மாகாணத்தின் நகர சபைத் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு படிசெலுத்தும் விதி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணத்தின் நகர சபைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நகர சபை தலைவர்களுக்கும், உப தலைவர்களுக்கும் மற்றும் சபை உறுப்பினர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிஒன்று 2014, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| நகர சபைத் தலைவர் | - | 25,000.00 |
| உப தலைவர் | - | 20,000.00 |
| சபை உறுப்பினர் | - | 15,000.00 |

3. (1) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் நகர சபைத் தலைவருக்கு, உப தலைவருக்கு, உறுப்பினர்களுக்கு மேலுள்ள படிக்காக உரிமை கிடைக்கப்பெறமாட்டாது.

(i) சபையின் அனுமதியைப் பெறாது படியை கொடுப்பனவு செய்வதற்கு உரிய மாதத்தின் சபைக் கூட்டத்தில் மற்றும் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காமை ;

(ii) சபையின் பணிகளுக்கும் வெளிவாரியாக தனிப்பட்ட பணிகளுக்காக வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளல் ;

(iii) ஏதாவது குற்றமொன்றுக்காக குற்றப்பத்திரிகை சுமத்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குச் செல்லுதல் அல்லது சிறையிலிருத்தல்.

(2) இக்கட்டளையின் 1 ஆம் பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், நகர சபைத் தலைவர், உப தலைவர் அல்லது சபை உறுப்பினர் ஒருவரின் கடமை கருமங்களுக்காக ஒழுங்கு முறையில் அமைந்த அனுமதியுடன் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் சபைக் கூட்டத்திற்கு அல்லது நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காத காரணத்தின் அடிப்படையில் அவரது படிக்கு உரிமையுடையவராவர்.

12- 178/2

---

**மேல் மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

மேல் மாகாணத்தின் முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சராகவும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ள பிரதேச சபைத் தலைவர், பிரதேச சபை உப தலைவர் மற்றும் சபை உறுப்பினர்களுக்கான படிக்குரிய விதி இங்கு நிறைவேற்றுப்படுவதாகுக. இவ்விதி 2014.11.01 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வருவதுடன், அத்தினத்திற்கு முன்புள்ள திகதி தொடக்கம் செயற்படுத்தும் வகையில் விடயத்திற்குரிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1399/5 ஆம் இலக்க மற்றும் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 2005.06.27 ஆந் திகதியின் கட்டளை மாற்றப்பட்டுள்ளது.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாணத்தின் மாகாண சபை முதலமைச்சர் மற்றும் நிதி மற்றும்
திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு,
பொறியியல் சேவைகள் மற்றும் செய்தி தொடர்பான அமைச்சர்.

சிராவஸ்தி மந்திரய,
ஸ்ரீமத் மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 19.

**கட்டளை**

1. இக்கட்டளை மேல் மாகாணத்தின் பிரதேச சபைத் தலைவர், உப தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு படி செலுத்தும் கட்டளை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபைத் தலைவர்களுக்கும், உப தலைவர்களுக்கும் மற்றும் சபை உறுப்பினர்களுக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படி ஒன்று 2014, நவெம்பர் மாதம் 01 ஆந திகதி தொடக்கம் செலுத்தப்பட வேண்டும்.

| | | ரூபா சதம் |
|---|---|---|
| பிரதேச சபைத் தலைவர் | - | 25,000.00 |
| உப தலைவர் | - | 20,000.00 |
| சபை உறுப்பினர் | - | 15,000.00 |

3. (1) கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பிரதேச சபைத் தலைவருக்கு, உப தலைவருக்கு, உறுப்பினர்களுக்கு மேலுள்ள படிக்காக உரிமை கிடைக்கப்பெறமாட்டாது.

(i) சபையின் அனுமதியைப் பெறாது படியை கொடுப்பனவு செய்வதற்கு உரிய மாதத்தின் சபைக் கூட்டத்தில் மற்றும் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காமை ;

(ii) சபையின் பணிகளுக்கும் வெளிவாரியாக தனிப்பட்ட பணிகளுக்காக வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளல் ;

(iii) ஏதாவது குற்றமொன்றுக்காக குற்றப்பத்திரிகை சுமத்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டு சிறைக்குச் செல்லுதல் அல்லது சிறையிலிருத்தல்.

(2) இக்கட்டளையின் 1 ஆம் பந்தியின் (i) ஆம் உப பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், பிரதேச சபைத் தலைவர், உப தலைவர், அல்லது சபை உறுப்பினர் ஒருவரின் கடமை கருமங்களுக்காக ஒழுங்கு முறையில் அமைந்த அனுமதியுடன் ஈடுபட்டுள்ள சந்தர்ப்பங்களில் சபைக் கூட்டத்திற்கு அல்லது நிர்வாக சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்காத காரணத்தின் அடிப்படையில் அவரது படிக்கு உரிமையுடையவராவர்.

12- 178/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.